

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2024) தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத் துறை சார்பில் ஒகேனக்கல் அருவிப் பகுதிகள், கொல்லி மலை, ஆண்டிபாளையம் ஏரி, வத்தல்மலை, முட்டம் கடற்கரை, அந்தியூர் ஏரி, மன்னார்குடி ஹரித்ராநதி கோயில் குளம் ஆகியவை 27 கோடியே 34 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் பி. சந்தரமோகன், சுற்றுலாத் துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருப்பெரும்புதூரில் 100 படுக்கைகள் கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவமனை!

## டி.ஆர். பாலு கேள்விக்கு – மக்களவையில் ஒன்றிய தொழிலாளர் நல அமைச்சர் பதில்!

புதுடெல்லி, நவ.28-

புது டெல்லியில் நாடாளுமன்றத்தின் குளிர்கால அமர்வு 25.11.2024 அன்று தொடங்கியது. திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினரும் நாடாளுமன்ற மக்களவை தி.மு.க. குழுவின் தலைவருமான டி.ஆர்.பாலு, எம்.பி., மக்களவைக் கூட்டத்தொடரின் முதல் நாளே திருப்பெரும் புதூரில் ஒன்றிய அரசின் தொழிலாளர் காப்பீட்டுக் கழகம் (இ.எஸ்.ஐ) மருத்துவமனை அமைப்பது தொடர்பான கேள்வியை எழுப்பினார்.

**டி.ஆர்.பாலு கேள்வி**

சென்னையை அடுத்த திருப்பெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை படப்பை உள்ளிட்ட பகுதிகளில் நூற்றுக்கணக்கான கனரக, நடுத்தர மற்றும் சிறு-குறு தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். தொழிலாளர்கள் மட்டுமல்லாமல் அவர்களுடைய குடும்பத்தினருக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை வசதிகள் உரிய முறையில் பெற வேண்டியதைக் கருத்தில் கொண்டு திருப்பெரும்புதூரில் மருத்துவமனையை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதா? அப்படி என்றால் அதன் முழு விவரங்கள் என்ன? மருத்துவமனை

அமைத்திடும் திட்டம் ஏதும் இல்லை என்றால் அதற்கான காரணம் என்ன? மருத்துவமனை வசதிகள் அமைப்பதில் தாமதமாவதற்கு என்ன காரணம்? என்று பல்வேறு கேள்விகளை கேட்டிருந்தார்.

அமைச்சர் ஷோபா பதில்

இந்தக் கேள்விக்கு ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் செல்வி.ஷோபா கராந்த்லாஜே அவர்கள், மக்களவையில் 25.11.2024 திங்கட்கிழமை அன்று எழுத்துப் பூர்வமாக பதிலளித்தார். அதன் விவரம் பின்வருமாறு:



“திருப்பெரும்புதூரில் 100 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையை உடனடியாக அமைக்க இ.எஸ்.ஐ. நிறுவனம் முடிவெடுத்துள்ளது. 178 கோடி ரூபாயில் மருத்துவமனை வசதிகள் உருவாக்கப்படும். இது தொடர்பாக உரிய நிதி அனுமதி இ.எஸ்.ஐ. நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுவிட்டது. மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் மத்திய பொதுப்பணித் துறையின் பொறுப்பில் விடப்பட்டு அதற்கான ஆணையும் தரப்பட்டுள்ளது. மருத்துவமனை கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கும்”.

திருப்பெரும்புதூர் பகுதியில் உள்ள பல்வேறு ஆலைகளிலும் தொழில் நிறுவனங்களிலும் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களும் உரிய மருத்துவம் மற்றும் சிகிச்சை வசதிகள் பெற வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி தொகுதி எம்.பி. திரு டி.ஆர்.பாலு தொடர்ந்து ஒன்றிய அரசுக்குக் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் இ.எஸ்.ஐ. மருத்துவமனையை திருப்பெரும்புதூரில் அமைக்க ஒன்றிய அரசும், தொழிலாளர் காப்பீட்டு நிறுவனமும் முன்வந்துள்ள குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர்: கழகத் தலைவர் அறிவுறுத்திய செயல் திட்டம்!

# புதுடெல்லியில் - தி.மு.க. எம்.பி.க்கள் கலந்துரையாடல் கூட்டம்!

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தலைமை!

## டி.ஆர்.பாலு எம்.பி. – திருச்சி சிவா எம்.பி. – ஆ.இராசா எம்.பி. பங்கேற்பு!

புதுடெல்லி, நவ.28–

புதுடெல்லி அண்ணா – கலைஞர் அறிவாலயத்தில் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடர்பான தி.மு.க.வின் செயல் திட்டம் குறித்த கூட்டம் தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கழகத்தலைவர் அவர்கள் அறிவுறுத்திய செயல்திட்டத்தை டி.ஆர். பாலு எம்.பி., திருச்சி சிவா எம்.பி., ஆ. இராசா எம்.பி. உள்ளிட்ட தி.மு.க.வின் மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கலந்துகொண்டு கலந்துரையாடினர்.

**சிஏ தேர்வு தேதி மாற்றம். – கனிமொழி கருணாநிதி எம்.பி. கருத்து!**

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையன்று சி.ஏ. தேர்வு திட்டமிடப்பட்டதை எதிர்த்து, தி.மு.க. சார்பில் நாடாளுமன்றத்தில் 25.11.2024 அன்று ஒத்திவைப்பு தீர்மானம் ஒன்றை கனிமொழி கருணாநிதி எம்.பி. தாக்கல் செய்திருந்த நிலையில் தற்போது இந்தத் தேர்வு ஜன.14ஆம் தேதியிலிருந்து 16ஆம் தேதிக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

நமது கலாச்சார விழுமியங்களை ஒன்றிய அரசு மீண்டும் மீண்டும் கண்டுகொள்ளாமல் இருப்பது வருத்தமளிக்கிறது என இது குறித்து கனிமொழி கருணாநிதி, எம்.பி கருத்து தெரிவித்துள்ளார்.

**வக்பு சட்டத் திருத்த மசோதா ஆய்விற்கு கால நீட்டிப்பு!**

வக்பு சட்டத் திருத்த மசோதா குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்குக் காலநீட்டிப்பு வழங்க வேண்டும் என்று ஆ. இராசா எம்.பி., எம். எம். அப்துல்லா எம்.பி. உள்ளிட்ட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் (26.11.2024), மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவிடம் கடிதம் அளித்துள்ளனர்.

**இ.எஸ்.ஐ மருத்துவமனை – டி.ஆர். பாலு எம்.பி. கோரிக்கை!**

திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினரும் நாடாளுமன்ற மக்களவை தி.மு.க. குழுவின் தலைவருமான திரு. டி.ஆர்.பாலு, எம்.பி. மக்களவைக் கூட்டத்தொடரின் முதல் நாளான 25112024 அன்று திருப்பெரும்புதூரில் ஒன்றிய அரசின் தொழிலாளர் காப்பீட்டுக் கழகம் (இ.எஸ்.ஐ) மருத்துவமனை அமைப்பது தாமதமாவதன் காரணத்தைக் கேட்டு கேள்வி எழுப்பினார்.

தொகுதி எம்.பி. தொடர்ந்து ஒன்றிய அரசுக்குக் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் இ.எஸ்.ஐ. மருத்துவமனையை திருப்பெரும்புதூரில் அமைக்க ஒன்றிய அரசும், தொழிலாளர் காப்பீட்டு நிறுவனமும் தற்போது ஒப்புதல் அளித்துள்ளது.

**தி.மு.க. உறுப்பினர்கள் அரசியல் சாசன உறுதிமொழி ஏற்பு!**

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் இந்திய அரசியலமைப்பு நாள் நிகழ்ச்சி நடந்தது. குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்கள் தலைமையில் நடந்த இந்நிகழ்ச்சியில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு அரசியல் சாசன உறுதிமொழி ஏற்றனர்.

# அண்ணாவிடம் கடன் வாங்கி அண்ணன் வாழ்த்துகிறேன்!



ஒருநாள்
கலைஞரும் நானும்
கோபாலபுரத்தில்
உரையாடிக்
கொண்டிருந்தோம்

உதயநிதி தன் மனைவி
கிருத்திகாவோடு வந்தார்;
நின்றுகொண்டே பேசினார்

கலைஞர் மறுத்த ஒருகருத்தை
தன் வாதத்தை முன்னிறுத்திச்
சாதித்துச் சென்றார்

அப்போதே
தெரிந்துகொண்டேன்
வலிவும் தெளிவும் மிக்க
வல்லவர் இவரென்று

உதயநிதி
பேரீச்சம் பழம்போல்
மென்மையானவர்; ஆனால்
அதன் விதையைப்போல்
உறுதியானவர்

சின்னச் சின்ன எதிர்ப்புகள்
இவரைச் சிதைப்பதில்லை

குன்றிமணி முட்டிக்
குன்றுகள் சாய்வதில்லை

காலம் இவரை
மேலும் மேலும்
செதுக்கும்; புதுக்கும்

“தம்பீ வா
தலைமையேற்க வா”
அண்ணாவிடம் கடன்வாங்கி
அண்ணன் வாழ்த்துகிறேன்

–கவிப்பேரரசு
**வைரமுத்து**

## 80 ஏழைக் குழந்தைகளுக்கு

# இலவச இதய அறுவை சிகிச்சை!

## சன் டி.வி. ரூ.1 கோடி நிதியுதவி!



சென்னை, நவ. 28 -

குழந்தைகளுக்கு இலவச இதய அறுவை சிகிச்சை செய்வதற்காக சன் டி.வி. குழுமம் ஒரு கோடி ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது.

முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவச் சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, அப்போலோ மருத்துவமனையில் செயல்பட்டு வரும் சாச்சி அறக்கட்டளை மூலம் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச இதய அறுவை சிகிச்சை செய்வதற்காக அந்த மருத்துவமனைக்கு சன் டி.வி. 1 கோடி ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது.

இதற்கான காசோலையை, அப்போலோ மருத்துவமனை குழந்தைகள் இதய சிகிச்சை பிரிவின் துறைத் தலைவர் டாக்டர் முத்துகுமரனிடம் சன் டி.வி. குழுமம் சார்பில் மல்லிகா மாறன், காவேரி கலாநிதி மாறன் ஆகியோர் வழங்கினர்.

அப்போது குழந்தைகள் இதய அறுவை சிகிச்சைப் பிரிவு துறைத் தலைவர் டாக்டர் நிவில் சாலமன், சென்னை மண்டல மருத்துவ சேவை இயக்குநர் டாக்டர் வெங்கடாசலம், குழந்தைகள் இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் சரண்யா அமல், மருத்துவமனை நிர்வாகிகள் நிரஞ்சனி, ராஜ்குமார் உடனிருந்தனர்.

“இந்த நிதியின் மூலம் தமிழ்நாடு, ஆந்திராவைச் சேர்ந்த 80 ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும் என்று குழந்தைகள் இதய சிகிச்சைப் பிரிவின் தலைவர் டாக்டர் முத்துக்குமரன் தெரிவித்தார்.

ஏழை எளியோருக்கு கல்வி, அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் கற்றல் சூழலை மேம்படுத்துதல், தரமான இலவச சிகிச்சை, மகளிர் மற்றும் இளைஞர் நலன், கிராமப்புற மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக சன் டி.வி.யும், சன் பவுண்டேஷனும் தொடர்ந்து நிதி உதவி அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.



சென்னை தெற்கில் ”உதயநிதியின் உதய நாள் விழா 364 பேச்சாளர்கள் பங்கேற்கும் வண்ணம் 182 கூட்டங்களாக நடத்தப்பட உள்ளது. அதற்கான அழைப்பிதழ் நேற்று முன்தினம் (26.11.2024) மாலை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.



கழக இளைஞரணிச் செயலாளரும் – துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் வாரியாக கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளின் அழைப்பிதழை அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. வழங்கினார்.



கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் 25.11.2024 அன்று நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அலுவலகத்தில் அமித்ஷா அவர்களை நேரில் சந்தித்து கூட்டுறவுத் துறை தொடர்பான கோரிக்கையினை வழங்கினார். இந்நிகழ்வில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என்.சுப்பையன் ஆகியோர் உடனிருந்தனர்.